**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 30.01.2026

அசல் வழக்கு எண். 16/2023

வா.சா.1. – பூங்கொடி, த/பெ. முருகவேலன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

அசல் வழக்கு எண் 380/2022 என்கிற வழக்கில் இடைக்கால உறுத்து கட்டளை வாங்கிய விவரம் எதிர்தரப்பினருக்கு தெரியும் என்று சொல்லி உள்ளீர்கள் அந்த நோட்டீஸ் எப்பொழுது சார்வு செய்யப்பட்டது என்றால் 23.12.2022 வக்காலத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஆகவே அதற்கு முன்பாகவே தெரிந்திருக்கும். கடந்த 27.12.2022 அன்று முதல் பிரதிவாதியும் அவரது ஆட்களும் சேர்ந்து கொண்டு சுற்று சுவரை இடித்து விட்டதாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தீர்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் காவல் நிலையத்தில் சி எஸ் ஆர் நகல் உங்களுக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த சி எஸ் ஆர் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்கள் அதனை படித்து பார்த்தீர்களா என்றால் படித்து பார்த்தேன். தேதியும் எதற்காக புகார் கொடுக்கப்பட்டது என்கிற விவரமும் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் சுற்றுச்சுவரை இடித்து விட்டதாக சிஎஸ்ஆர் நகரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. வேலை செய்ய விடாமல் தடுத்து இருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் பிரதிவாதி சுற்றுசுவர் இடித்து விட்டார் என்கிற விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வேலை செய்வதை தடுத்ததாக சொல்கிறீர்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் எங்கள் வீட்டின் உள்ள பாத்ரூம் ரிப்பேர் செய்து கொண்டிருந்தோம் வீட்டுக்கு வெளியே

எந்த வேலையும் செய்யவில்லையா என்றால் வெளியே வழியே இல்லை. பாத்ரூம் ரிப்பேர் செய்ததை தடுக்க வந்தார் என்று உங்கள் வழக்கில் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லி உள்ளேன். வழக்கில் நீங்கள் மாதிரி வரைபடம் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் எங்கு காம்பவுண்டு சுவர் இருந்தது எந்த அளவுக்கு இடித்துக்கப்பட்டது என்று வரைபடத்தில் சொல்லவில்லை என்றால் வழக்கில் சொல்லியுள்ளேன் வரைபடத்தில் சொல்லவில்லை. உங்களுடைய சுவரில் இடித்து வந்தால் நீங்கள் தெளிவாக எந்த அளவுக்கு இடிக்கப்பட்டது என்கிற விவரம் வரைபடத்தில் சொல்லி இருப்பீர்கள் என்றால் சரியில்லை வழக்கில் சொல்லி உள்ளேன். நீங்கள் இடித்ததாக சொல்லும் இடம் உங்களிடம் காட்டும் புகைப்படம் என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் உங்கள் வீட்டுக்கு பக்கத்தில் பன்னீர்செல்வம் வீடு இருப்பதாக உள்ளதா என்றால் முன் பக்கம் பன்னீர் வீடு உள்ளது பின்பக்கம் என் வீடு உள்ளது. பன்னீர் இடம் காலியாக தான் இருக்கிறது வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. வழக்கிற்கும் ஆவணம் 12 மற்றும் 16க்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரி இல்லை. புகாரில் கூட நீங்கள் காம்பவுண்ட் சுவர் பிரதிவாதிகள் இடித்து விட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியில்லை. 15வது ஆவணம் வருமான வரி சம்பந்தப்பட்டது வழக்கிற்கு சம்பந்தமில்லை என்று சொன்னால் சரி இல்லை. உங்கள் கணவர் வாங்கிய இடத்திற்கு தான் வரி கட்டியுள்ளீர்கள் பக்கத்து வீட்டுக்கு வரி கட்டவில்லை என்றால் பக்கத்தில் உள்ள வீட்டிற்கு வரி கட்டவில்லை. என்னுடைய வீடாக இருந்தால் தான் நான் வரி கட்ட முடியும். காம்பவுண்டு சுகர் வழக்கு

சொத்தில் இருக்கிறது என்று காட்டுவதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் அனைத்து ஆவணங்களும் தாக்கல் செய்து விட்டேன். நீங்கள் தாக்கல் செய்த ஆவணத்தில் கூட அவ்வாறு இல்லை ஆகவேதான் நீங்கள் வழக்கறிஞர் ஆணையர் கூட நியமிக்க மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. காம்பவுண்ட் சுவர் நீங்கள் கிரயம் வாங்குவதற்கு முன்பாகவே இருந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் முழுமையாக வீடு கட்டிய பிறகுதான் உங்களுக்கு கிரயம் எழுதப்பட்டது என்றால் சரிதான். அப்படி எழுதும்போது காம்பவுண்டு சுவர் உங்கள் எல்லைக்குள் வரவில்லை என்றால் சரியில்லை என்னுடைய எல்லைக்குள் தான் காம்பவுண்ட் சுவர் இருக்கிறது. காம்பவுண்ட் சுவர் கனக சபாபதி உயிருடன் இருந்த பொழுது கட்டியது என்றால் சரியில்லை. முதல் பிரதிவாதியிடம் இருந்து சட்ட புறம்பாக பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் தொடர்ச்சியாக வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. முதல் பிரதிவாதியின் காம்பவுண்ட் சுவர் சட்ட புறம்பாக அடைய வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவருக்கு அங்கு சொத்து கிடையாது அப்படி இருக்கும்போது காம்பவுண்ட் சுவர் எப்படி வந்திருக்க முடியும். உங்களுக்கு சொந்தமான சொத்தில் சர்வே எண் தெரியுமா என்றால் 35/3பி ஆகும். மேற்கு பக்கம் உள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. புலவரைபடம் நீங்கள் பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. புலவரை படம் பார்க்கவில்லை என்று பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை உங்கள் சொத்துக்கு தெற்கு பக்கத்தில் சர்வே எண் 35/3ஏ1 உள்ளது என்றால் சரி இல்லை. அதற்கு

கனக சபாபதி பெயரில் வட்ட வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ரூ.1,25,000/– நஷ்டம் ஏற்பட்டது என்று எதன் அடிப்படையில் சொன்னீர்கள் என்றால் எங்கள் ஊரில் உள்ள ஒரு இன்ஜினியரை அழைத்து கேட்டோம் அவர் கணக்கு போட்டு சொன்னார். அவரிடம் சான்று வாங்கி நீதிமன்றத்தின் தாக்கல் செய்தீர்களா என்றால் சான்று வாங்கவில்லை. அசல் வழக்கு எண் 380/2022 என்ற வழக்கில் இடைக்கால மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் எந்த தீர்ப்பும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கு தீர்மானிப்பதற்கு முன்பாக இந்த வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியில்லை. ஒரே பரிகாரம் கோரி இந்த நீதிமன்றத்திலும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் ஒரே நேரத்தில் வழக்கு தாக்கல் செய்ததால் நீங்கள் தூய்மையான கருத்துடன் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரியில்லை. நீதிமன்றத்தை ஏமாற்றி இடைக்கால உத்தரவு பெற்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியில்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram